பக்கங்கள்:-20

# காலை முரசு

## போதை மருந்தை ஊசி மூலம் ஏற்றிய இளைஞர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அதிகளவு போதை மருந்தை ஊசி மூலம் 06

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 11 | வியாழக்கிழமை | 25.01.2024 | அதிர்வு 177



### இருண்ட யுகத்தை உருவாக்கும்

# அரசுக்கு மக்கள் பாடம் புகட்டுவர்

### நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் எம்.பி. எச்சரிக்கை

“நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் (இணையவழி பாதுகாப்புச் சட்ட மூலம்) அரசால் அவசரமாகக் கொண்டு வரப்பட்டதற்கு காரணம் என்ன? இந்தச் சட்டமூலம் இருண்ட யுகத்தையே உருவாக்கும். ஆனால், மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 06

### கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில்

## நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றம்



நிகழ்நிலை காப்புச் சட்ட மூலம் (இணையவழி பாதுகாப்புச் சட்டமூலம்) 46 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்ட மூலம் மீது நாடாளு 06



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவை அடுத்து, அதில் வெற்றியீட்டிய சிவஞானம் சிறீதரன் எம்.பி. வெளிப்படுத்திய பிரதிபலிப்புகள் வெளியே தெரியாத பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. முதலில் – தமிழ்த் தேசியக் கட்சிகளை தமிழ் கூட்டமைப்பாக ஒன்றுபட விடுத்த அவரது அழைப்புக்கு தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்களிடமிருந்து இன்னும் திட்டவட்டமான பிரதிபலிப்புகள் 06

# பொது இணைக்கப்பாட்டுடனான திட்டங்களை நடைமுறைப்படுத்த எம்.பிக்களுக்கு தடையில்லை

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு



**“நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் தமக்கு ஒதுக்கப்படும் நிதியில் தமது யோசனையின் கீழான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எந்த தடையும் கிடையாது. மாவட்ட, பிரதேச அபிவிருத்தி குழு மற்றும் கிராம மட்டத்தில் இடம்பெறும் கூட்டங்களில் இணைந்து பொது இணக்கப்பாட்டுடனான யோசனைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளது.”**

**- இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே செஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“வரவு – செலவுத் திட்டத்தினை எதிர்த்த குழுவினர் அதன் நன்மைகளை பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ள போது பலாத்காரமாக அதன் பங்காளிகளாகியுள்ளமையுடன் அவர்கள் வரவு – செலவு திட்டத்தை எதிர்த்தாலும் மக்கள் பிரதிநிதிகளாக குழுக்களில் கலந்து கொண்டு மக்கள் இணக்கப்பாட்டுடன் யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எந்தத் தடையும் கிடையாது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவின் ஒத்துழைப்பை குறைவாக மதிப்பிட முடியாது.

மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பல வருடங்களுக்குப் பின் பிரதேச அபிவிருத்திக்கென 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள 91 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக மேலும் 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் ஊடாக மாவட்ட இணைப்புக் குழு தலைவர்கள் மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. நேர்மையான வகையில் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் அந்த ஆலோசனைகள் அமைந்துள்ளன.”– என்றார்.

# 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு நேர்ந்த கதியே இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்துக்கு நேரிடும்

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



**கொழும்பு, ஜனவரி. 25**

**“20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு நேர்ந்த கதியே இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்துக்கு நேரிடும்.”**

**- இவ்வாறு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உத்தேச இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

”மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பனவற்றில் சிங்கப்பூர் முன்னேற்ற நிலையில் இல்லை. ஆகவே சிங்கப்பூர் நாட்டின் மாதிரியிலான வகையில் இணையவழிப் பாதுகாப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு நேர்ந்த கதியே இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலத்துக்கும் நேரிடும். அரசாங்கத்துக்கு எதிரான கருத்தை குறிப்பிடும் சகலரையும் பயங்கரவாதிகள் என்றும் சித்திரிக்கும் நிலைப்பாட்டில் இருந்து கொண்டு அரசாங்கம் செயற்படுகிறது.” – என்றார்.

# இவ்வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல்!



## ரணில் உறுதியாகவுள்ளாராம்

இந்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

”பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றார். தேர்தல் தொடர்பான நகர்வுகள் இரண்டாம் பட்சமானவைதான். ஆனால், எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலை ஜனாதிபதி நடத்தியே தீருவார்.” – என்றார்.

# இணையவழி பாதுகாப்புச் சட்டம் அமுலானால் குற்றங்களுக்கு நீண்ட கால சிறைத் தண்டனை

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை




இணையவழி பாதுகாப்புச் சட்டம் பரந்த மற்றும் தெளிவற்ற பேச்சு தொடர்பான குற்றங்களுக்கு நீண்ட கால சிறைத் தண்டனைகளை ஏற்படுத்தும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியத்தின் பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ஆண்டு இறுதியில் இலங்கை, நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களுக்குத் தயாராகி வரும் நிலையில், கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை இந்தச் சட்டம் கடுமையாக அச்சுறுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இணையவழி பாதுகாப்புச் சட்டம், இணைய துன்புறுத்தல், துஷ்பிரயோகம் மற்றும் மோசடி ஆகியவற்றுக்கு எதிராக பாதுகாப்பை வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், ஜனாதிபதியால் புதிய இணையவழி பாதுகாப்பு ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கும், இணையவழியில் தீங்கு விளைவிக்கும் இடுகையை அகற்றுவதற்கும், இணைய அணுகலைக் தடை செய்வது மற்றும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கும் இது வழிவகுக்கு எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருமாயின் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நிபுணர்களுக்கு சந்தேகநபர்களின் வளாகத்துக்குள் பிரவேசித்து சோதனையிட அதிகாரம் அளிக்கப்படும்.

குற்றங்களுக்கு அதிக அபராதம் மற்றும் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம், இந்தச் சட்டம் அனைத்து விதமான சட்டபூர்வமான வெளிப்பாட்டையும் குற்றமாக்கக்கூடும் எனக் கருதுகின்றது.

இந்தச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தின் மீது பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் சூழலை உருவாக்குகின்றது." – என்றுள்ளது.

# சுகிர்தராஜன் நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு









(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 18 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா ஊடக அமையத்தின் தலைவர் கு.கோகுலன் தலைமையில் ஊடக அமையத்தில் இந்திகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, நெருக்கடியான கால கட்டத்தில் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிக் கொண்டிருந்த போது திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 18 ஆவது ஆண்டு நினைவு ஏந்தல் அஞ்சலி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் நிமலராஜனின் படத்திற்கு மாலை அணிவித்து தீபம் ஏற்றி மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.

# மீனவர்களின் நலன்புரிச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு புதிய வேலைத்திட்டம்

## கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தகவல்

**"மீனவர்களின் ஆரோக்கியம் மற்றும் நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் 'தீவர சுவ சவிய' என்ற புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது."**

**- இவ்வாறு கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்தார்.**



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"'தீவர சுவ சவிய' முதற்கட்ட வேலைத்திட்டம் வென்னப்புவ, வெல்லமங்கரய மீன்பிடித் துறைமுகத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும்போது மீனவர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மீனவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டால் அவர்களுக்கு முதலுதவி அளிப்பதில் சவால்கள் இருக்கின்றன.

சில நேரங்களில் நோய்வாய்ப்பட்ட மீனவர்களுக்கு சிகிச்சை அளிக்க, நடுக்கடலில் வெளிநாடுகளின் உதவியையும் பெற வேண்டிய தேவை ஏற்படுகிறது..

இந்தநிலைமைகள் அனைத்தையும் கருத்திற் கொண்டு, மீனவ சமூகத்தின் ஆரோக்கியத்தையும் நலனையும் மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்படும் மிகப் பாரிய திட்டமாக "தீவர சுவ சவிய" வேலைத்திட்டம் அமையவுள்ளது.

மேலும் ஒரு மீனவர் இறந்தால் அந்த மீனவக் குடும்பத்தின் வருமானம் முற்றிலுமாக நின்று விடுகிறது. குடும்ப உறுப்பினர்களும் ஆதரவற்றவர்களாக மாறுகிறார்கள். இதற்கான நிலையான வேலைத்திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது.

இந்த நிலைமைகள் அனைத்தையும் கருத்திற் கொண்டு, மீனவ சமூகத்தின் ஆரோக்கியத்தையும் நலனையும் மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்படும் மிகப் பாரிய திட்டமாக 'தீவர சுவ சவிய' வேலைத்திட்டத்தைக் குறிப்பிடலாம். இதன் முதற்கட்ட நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வென்னப்புவ வெல்லமங்கரய மீன்பிடித் துறைமுகத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரண ஆகியோரின் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து மீனவர்களும் முழுமையான மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும். இதற்காக ஒவ்வொரு மீன்பிடித் துறைமுகத்தின் அருகிலும் உள்ள ஒரு அரச மருத்துவமனையை பெயர் குறிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவச் சான்றிதழ் இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். சம்பந்தப்பட்ட மீனவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மருத்துவச் சான்றிதழைப் பெற வேண்டும். இந்த வேலைத்திட்டத்தில் முதலில் ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களின் மாலுமிகள், பின்னர் அந்தக் கப்பல்களின் பணியாளர்கள் உள்வாங்கப்படுவார்கள். அதன் பின்னர் நாட்டில் உள்ள அனைத்து மீனவர்களையும் இந்தத் திட்டத்தில் உள்வாங்க திட்டமிடப்பட்டுள்ளது." – என்றார்.

# 13 ஆவது திருத்தம் பலவீனமடைய தமிழ்க் கட்சிகளே முழுக் காரணம்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ குற்றச்சாட்டு



"தமிழ்க் கட்சிகளால்தான் 13ஆவது திருத்தம் பலவீனமடைந்தது. 13ஆவது திருத்தம் தற்போது வழங்கும் அதிகாரங்களைக்கூட தமிழ்க் கட்சிகள் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதே உண்மை."

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் போதாது என்றும், கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றன. 13ஆவது திருத்தம் இன்று நலினமடைந்திருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால், 13ஆவது திருத்தத்தில் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைக்கூட தமிழ்க் கட்சிகள் உரிய முறையில் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது, அவருக்கும் இதர உறுப்பினர்களுக்கும் இடையிலான கருத்து மோதல்களுக்கும் அரசியல் முரண்பாட்டுக்கும்தான் தமிழ்க் கட்சிகள் முக்கியத்துவம் வழங்கிச் செயற்பட்டனவே அன்றி, 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையாவது உரியமுறையில் பயன்படுத்த எத்தனிக்கவில்லை.

இதனால்தான் வடக்கு மாகாணத்துக்காக மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி, செலவிடப்படாமல் மீளத் திரும்பியது. கிழக்கு மாகாணத்திலும் இதேபோன்றதொரு நிலையே இருந்தது. ஆக, இருக்கும் அதிகாரங்களைக்கூட சரிவரப் பயன்படுத்தாமலிருந்துவிட்டு கூடுதல் அதிகாரங்களைத் தாருங்கள் என்று கேட்பது பொருத்தமற்றது." – என்றார்.



# “மயிலத்தமடு எங்கே இருக்கின்றது?”

## இப்படிக் கேட்டார் நீதி அமைச்சர்

மட்டக்களப்பு, மயிலத்தமடுவில் சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு எதிராகப் பண்ணையாளர்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வரும் நிலையில், “மயிலத்தமடு எங்கே இருக்கின்றது?” என்று வியப்புடன் கேட்டுள்ளார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ.

மயிலத்தமடுவில் இடம்பெறும் மிருகவதை, காணி ஆக்கிரமிப்பு, சிங்கள – பௌத்த பேரினவாத அடக்குமுறைகள் தொடர்பிலும், குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலும், நாட்டிலிருந்து நீதிபதி ஒருவர் வெளியேறிச் செல்லுமளவுக்கு அதிகரித்துள்ள அடக்குமுறைகள் தொடர்பிலும் நீதி அமைச்சர் விஜயதாஸவிடம் வினவப்பட்டது. இதையடுத்தே “மயிலத்தடு எங்கே இருக்கின்றது?” என்றவாறாகக் கேட்டுள்ளார் நீதி அமைச்சர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“குருந்தூர்மலை தொடர்பான விடயங்களை அறிந்தே வைத்திருக்கின்றேன். உண்மையில் சில அரசியல்வாதிகள் தான் இந்த விடயத்தை பதற்றமான நிலைக்குள் இட்டுச் செல்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகச் செயற்பட்ட ரி.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றமைக்கு அரச அழுத்தங்கள் காரணமல்ல. அந்தத் தகவல்கள் பொய்யானவை. உண்மையில் தனது குடும்பத்திலுள்ள பிரச்சினையால்தான் அவர் நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றார். இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு அனைத்துத் தகவல்களும் சேகரிக்கப்பட்ட பின்னரேயே தெரியப்படுத்துகின்றேன்.

அவருக்கு அச்சுறுத்தல் என்றால், அந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு அவருக்கு அதிகாரம் இருந்தது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் தன்னைத் தற்காத்துக் கொண்டிருக்கலாம். அல்லாதுவிடில் இந்த விடயத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பலவற்றை முன்னெடுத்திருக்கலாம். அதையெல்லாம் விடுத்து அவர் அச்சுறுத்தலால் தான் நாட்டைவிட்டு வெளியேறினார் என்று தெரிவிப்பது பொருத்தமும் இல்லை – அதில் உண்மையும் இல்லை.” – என்றார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரவில்லை. அது குறித்து கூட்டமைப்பின் ஒரு பிரமுகருடன் தொலைபேசியில் உரையாடிய சமயம் அவர் ஒரு விடயத்தைச் சொன்னார்.

"நல்லது. கூட்டமைப்பாக மீண்டும் செயல்பட அவர் அழைப்பு விடுத்தமை நல்லது. முதலில் இலங்கைத் தமிழரசு கட்சியின் பெயரில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவான கூட்டமைப்பினர் அங்கு ஒன்றாக இயங்குவதற்கான ஏற்பாடுகளை அவர் செய்ய வேண்டும். நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தைக் கூட்டி, கொறடா, கூட்டமைப்பு பேச்சாளர் தெரிவுகளை நீதி, நியாயமாக அவர் நடத்திக் காட்ட வேண்டும். பின்னர், அவரின் அழைப்பை ஏற்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக வலிமையாக ஒன்றுபட்டு இயங்குவது குறித்து ஆலோசிக்கலாம்." – என்றார்.

அவரின் இந்தக் கருத்து தமிழரசின் புதிய தலைவராக பதவி ஏற்க இருக்கும் சிறீதரனுக்குச் சமர்ப்பணம். சிறீதரன் இக் கருத்துக்குப் பதில் தருவாராயின் – பதில் நடவடிக்கை எடுப்பாராயின் – அவற்றை வாசகர்களுக்கு அப்படியே தருவேன்.

அடுத்தது – அவர் வெற்றியீட்டியதும் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று மாவீரர் நினைவுத்தூபியில் விளக்கேற்றி, கார்த்திகைப் பூவினால் அர்ச்சித்துத் தனது அரசியல் பயணத்தை தொடங்கியமையும், மாவீரர்களின் கனவை நினைவாக்குவோம் என்று அவர் அறிவித்த விடயமும்.

தமிழ்த் தேசியத்தை காப்பதற்காக சிறீதரனைத் தலைவராகக் கொண்டு வந்தோம் என்று கட்சிக்குள்ளும், கட்சிக்கு வெளியிலும் அவரைத் தூக்கிப் பிடித்தவர்களுக்கு அவரின் இந்த நடவடிக்கைகள் இறும்பூதெய்த வைத்திருக்கும். அதில் சந்தேகம் இல்லை.

ஆனால், தென்னிலங்கப் பக்கத்தில் இவ்விடயம் 'நெகட்டிவ் இம்பெக்டை' ஏற்படுத்தி இருப்பதை உணரக்கூடியதாக உள்ளது.

ஏற்கனவே சரத் வீரசேகரா நாடாளுமன்றத்திலேயே சிறீதரன் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்ற விடயம் தொடர்பில் நெருப்பெடுத்திருக்கின்றார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில், பிரதான வேட்பாளராகக் களம் இறங்கும் எவரும் சிறீதரனையும் அவர் தலைமையிலான தமிழரசையும் உள்ளடக்கிய எந்தக் கூட்டணியுடனும் தேர்தலுக்கு முந்திய உடன்பாடு எதற்கும் இனிமேல் இணங்கி வரமாட்டார்கள். அப்படி வருவது தெற்கில் தங்கள் தலையில் தாங்களே மண்ணள்ளிப் போடும் வேலை என்றே அவர்கள் கருதுகின்றார்கள்.

மறுபுறத்தில் சிறீதரனின் வெற்றி, தென்னிலங்கைத் தரப்பில் பிரதான அரசியல் சக்தியான மஹிந்தருக்கு வரவேற்பை ஏற்படுத்தியதா? அல்லது அதிர்ச்சியை தந்ததா? என்பது தெரியவில்லை.

ஆனால் சிறீதரன் எடுத்த நடவடிக்கைகள் குறித்து அறிந்ததும் மஹிந்தர் தமக்கு நெருக்கமான ஒருவரிடம் சிரித்துக் கொண்டு "தெற்கில் மீண்டும் எங்களுக்கு வலிமையான வாக்கு வங்கியை உறுதிப்படுத்துவதற்கான அடித்தளத்தை தனது முதல் நாள் நடவடிக்கைகள் மூலம் சிறீதரன் ஆரம்பித்து விட்டார். அதற்காக அவருக்கு என் நன்றியை கூறுங்கள்!" – என்று தமக்கு நெருக்கமான ஒருவரிடம் மஹிந்த ராஜபக்ஷ கூறினார் என அறியவந்தது.

விரைவில் வரும் ஜனாதிபதி தேர்தலை, தீர்வுக்கான முன் முயற்சிகளை நகர்த்துவதற்கான வாய்ப்பாக பயன்படுத்தும் சந்தர்ப்பம் அடிபட்டுப் போகப் போவதாகவே தோன்றுகின்றது...!

## போதை மருந்தை ஊசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்றியதால் உயிரிழந்துள்ளார்.

ஓட்டுமடம் பகுதியில் நேற்றுமுன் தினம் திடீரென உயிரிழந்த 26 வயது இளைஞரின் மரணத்தில் ஏதும் மர்மம் உள்ளதா எனக் கண்டறிய நேற்று உடற்கூறு ஆய்வு நடத்தப்பட்டது. இதன்போது ஊசி மூலம் அதிகளவு போதை மருந்து ஏற்றியமையே இளைஞரின் மரணத்துக்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டது.

அதேவேளை, உயிரிழந்த இளைஞரின் உடலில் போதை ஊசி மருந்து ஏற்றிய அடையாளமும் காணப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணையின் போது மேற்படி இளைஞர் போதை ஊசி பாவித்ததை வீட்டாரும் ஏற்றுக்கொண்டனர்.

## நிகழ்நிலை காப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மன்றத்தில் நேற்றுமுன்தினமும், நேற்றும் விவாதம் நடைபெற்றது.

நேற்றைய விவாதத்தின் பின்னர் 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதன்போது சட்டமூலத்துக்கு ஆதரவாக 108 வாக்குகளும், எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்பின்னர் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு அவையும் நிறைவேற்றப்பட்டன. இதனையடுத்து சட்டமூலம் திருத்தங்கள் சகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

இந்தச் சட்டமூலத்துக்கு எதிரணியினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் மீதான நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் மீதான விவாதம் தொடர்பாக நிலையியல் கட்டளை 50.2 சரத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதில், இந்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படுவதாக இருந்தால் அந்த மாற்றங்கள் துறைசார் மேற்பார்வை குழுவுக்கு அனுப்பப்பட்டு அந்தக் குழு அந்த மாற்றங்களைச் சரியாக ஆய்வு செய்து அது தொடர்பாக ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டு அந்த அறிக்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அந்த அறிக்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற வரைக்கும் அந்தச் சட்டமூலம் தொடர்பாக வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை என்னும் பெயரில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது, அந்த ஆவணம் அறிக்கை அல்ல என்றும், அந்த அறிக்கை ஜனவரி 23ஆம் திகதி மர்ப்பிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என்று குறிப்பிட்ட அறிக்கை இது வரைக்கும் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படாத நிலையில்தான் இந்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வரப்போகும் உண்மையான சட்டத்தில் இருக்கப்போகும் விடயங்கள் எல்லாமே மூடி மறைக்கப்பட்டு ஒரு இருண்ட நிலையில்தான் இந்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த விவாதம் நடைபெறும் விடயங்கள் தொடர்பான 56 சரத்துக்களின் 34 சரத்துக்கள் திருத்தப்படவேண்டும் என்று உயர் நீதிமன்ற வழக்குகள் மூலம் சொல்லப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக அரசினுடைய அமைச்சரே நியமித்த நிபுணர்கள் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் மேலதிகமான சரத்துக்களும் திருத்தப்பட்டு 42 சரத்துக்கள் இந்தச் சட்டமூலத்தில் திருத்தப்பட வேண்டிய நிலையில், அந்தத் திருத்தங்கள் செய்யப்படாமலயே இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

உலகத்தில் மிகமும் மதிக்கப்படுகின்ற ரெக் அமைப்புகளுடைய கூட்டான ஆசிய இணையக் குழு சிங்கப்பூரில் உள்ளது. இந்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் அமைச்சர் குறிப்பிடும் போது – ரெக் அமைப்பினுடைய அனுசரணையோடு தான் இந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார். அவரது அந்தக் கருத்துக்கு ரெக் அமைப்பு அறிக்கை ஒன்றை விட்டிருக்கின்றது.

இந்தச் சட்டமூலம் இப்போது இருக்கும் வடிவத்தில் நிறைவேற்றப்பட்டால் அது பாரிய அளவுக்கு ரெக் அமைப்புக்கள் இலங்கையில் தொடர்பு வைத்திருப்பதைத் தடுக்கும் என்றும், இவ்விடயம் கடும் எதிர்ப்பை உருவாக்கும் என்றும் தமது அமைப்பு சமர்ப்பித்த மாற்றங்கள் அனைத்தையும் உள்வாங்கினால் மட்டுமே சர்வதேச மட்டத்தில் இந்தச் சட்டமூலம் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், இப்போதைக்கு இருக்கக் கூடிய சட்டமூலத்தை தாங்கள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என்றும் அந்த அறிக்கை மூலம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அப்படியாயின், ஏற்கனவே 56 சரத்துக்களில் 42 சரத்துக்களை திருத்த வேண்டும் என்ற நிலை இருக்கையில் அதுவும் அமைச்சரே இந்த ரெக் அமைப்பினுடைய குழு வழங்கிய திருத்தங்கள் பெறுமதியானவை என்றும், அந்தச் சட்டமூலங்கள் எதிர்காலத்தில் திருத்தங்கள் ஊடாகக் கொண்டு வரப்படும் என்றும் தனது உரையில் சொல்லியிருக்கும் நிலையில், இதில் பாரிய குறைபாடுகள் உள்ளது என்பதையும் அமைச்சரே ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் தான், இந்தச் சட்டமூலம் குறைபாடுடைய சட்டமூலம் என்று அவரே இந்தத் திருத்தங்களைப் பற்றிப் பேசுகின்றார்.

அப்படியாயின் இந்தச் சட்டமூலத்தில் பாரிய குறைபாடுகள்

07▶

# உள்ளூர் முட்டை விலை 3 ரூபாவால் அதிகரிப்பு

உள்ளூர் முட்டை ஒன்றின் விலையை 3.00 ரூபாவால் அதிகரிக்க அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

வற் வரி அதிகரிப்பினால் உள்ளூர் முட்டை உற்பத்திச் செலவு 8.00 ரூபாயினால் அதிகரித்துள்ளது என சங்கத் தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், முட்டை ஒன்றின் விலை 3.00 ரூபாயி னால் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் சரத் ரத்நாயக்க குறிப்பிடுகின்றார்.

அதன்படி, கோழிப்பண்ணையில் இருந்து 45 ரூபாய்க்கு விற்கப்படும் உள்ளூர் முட்டை ஒன்றின் மொத்த விலை 48 ரூபாயாக அறவிடப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



## அரசுக்கு மக்கள்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

இருக்க இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு என்ன அவசரம் ஏற்பட்டுள்ளது? என்பதே இப்போதுள்ள கேள்வியா கும்.

ஏற்கனவே சர்வதேச மட்டத்தில் உதவியை கேட்டுக் கொண டிருக்கும் இலங்கைக்கு, அந்தச் சர்வதேச அமைப்புக்களினு டைய உதவிகள் வராமல் பண்ணுவதற்கு வழியேற்படுத் தப் போகின்ற ஆபத்துக்கள் உள்ள நிலையிலும், இந்தச் சட்டமூலத்தை அவசர அவசரமாக ஏன் நிறைவேற்றுகின் றீர்கள் என்றால் – இது பாரதூரமான ஜனநாயகத்தை மறுக் கக் கூடிய சட்டமூலம் என்று விமர்சனங்கள் இருக்கக் கூடிய தாகவே அவசரமாகவே நிறைவேற்றுவதற்கு நீங்கள் விரும் புகிறீர்கள் என்றால், அதற்குக் காரணம் – நீங்கள் அந்தப் பார தூரமான ஜனநாயக விரோத செயற்பாடுகளைச் செயற்படுத் துகின்ற சட்டத்தைத்தான் நீங்கள் விரும்புகின்றீர்கள் என் பதேயாகும்.

அப்படிப்பட்ட சட்டமூலத்தைக் கொண்டு வந்தால்தான் மக்க ளால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு ஜனாதிபதியும், மக்களால் நிராகரிக்கப்பட்ட அமைச்சரும், மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள இந்தச் சபையும், மக்களின் உண்மையான கருத்துக்களை வெளிவராமல் தடுத்து – உண்மையான விவாதங்கள் நடத் துவதற்கு அனுமதிக்காமல் இறுக்கி – அடுத்த தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கு நினைக்கின்றார்கள். அப்படிப்பட்ட இருண்ட யுகத்தை உருவாக்கி அடுத்த தேர்தலுக்கு முகங் கொடுத்தால் தாங்கள் வெல்லலாம் என்று கருதுகின்றார்கள். ஆனால் – அது நிச்சயமாக நடக்காது.

இந்த வாரம் ஒரு ஆய்வு மையம் நடத்திய ஒரு கூட்டத்துக்கு நான் சென்றிருந்தேன். அங்கே அரச தரப்பின் முக்கியஸ்தர்க ளும், எதிர்கட்சிகளின் முக்கியஸ்தர்களும் கூட வந்திருந்தனர். நாட்டு மக்கள் மிகப் பெருமளவில் மதிக்கின்ற கல்விமான்கள் அதில் பங்கேற்றிருந்தனர். அந்தச் சிவில் சமூகத் தலைவர்கள் எக்காரணம் கொண்டும், தீவிரவாதப் போக்குடையவர்களோ அல்லது பொறுப்பற்றவர்களோ அல்லது குழப்பவாதிகளோ என்று சொல்லக்கூடியவர்கள் அல்லர். மாறாக – மிக நிதான மாகவே தமது கருத்துக்களை தெரிவிப்பவர்கள். எக்காரணம் கொண்டும் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தும் விதமா கச் செயற்படுபவர்கள் அல்லர். எக்காரணம் கொண்டும் தேர் தல் அரசியலிலோ, கட்சி அரசியலிலோ ஈடுபடுபவர்களும் அல்லர். அப்படிப்பட்டவர்களே – இன்றைக்கு இந்த நாட்டி– னுடைய ஜனநாயகத்தைத் திட்டமிட்டு மறுதலிக்கின்ற மற்றும் இல்லாமல் செய்கின்ற செயற்பாடுகள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று சொல்கின்றார்கள்.

அதனுடைய முக்கியமான விடயமாகவே இந்த நிகழ் நிலைக் காப்புச் சட்டமூலமும் அமைந்துள்ளது என்று தெரிவிக் கின்றார்கள். ஆகவே – இவ்வளவு தூரத்துக்கு கண்டனங்கள் உள்ள நிலையில், சர்வதேச சமூகத்தின் உதவிகள் தேடிக் கொண்டிருக்கும் நிலையில், அதே சர்வதேச சமூகத்தைப் பகைக்கின்ற வகையில் இந்தச் சட்டமூலத்தைத் திருத்தாமல் நிறைவேற்றுவது அனைத்துமே – இந்த அரசு தன்னுடைய இருப்பையும் தன்னுடைய நலன்களையும் மட்டுமே பார்க்கின் றதேயொழிய, மக்களின் உண்மையான குரல்கள் கருத்துக் களுக்குப் பயப்படுகின்றார்கள் என்பதையே காட்டுகின்றது.

அந்தவகையில் மிகவும் இருண்ட யுகத்தை எதிர்காலத் தில் ஏற்படுத்துகின்ற வகையில் இவர்கள் செயற்படப் போகின் றார்கள் என்பதே இதன் மூலம் நிரூபிக்கப்படுகின்றது. ஆனால், மக்கள் அனைத்து செயற்பாடுகளுக்கும் தக்க பாடங்களை இவர்களுக்கு வழங்குவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. உண்மையான குரல்கள் கருத்துக்களுக்குப் பயப்படுகின்றார்கள் என்பதையே காட்டுகின்றது. அந்த வகையில் மிகவும் இருண்ட யுகத்தை எதிர்காலத்தில் ஏற் படுத்துகின்ற வகையில் இவர்கள் செயற்படப் போகின்றார் கள் என்பதே இதன் மூலம் நிரூபிக்கப்படுகின்றது. ஆனால், மக்கள் அனைத்து செயற்பாடுகளுக்கும் தக்க பாடங்களை இவர்களுக்கு வழங்குவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இந்தியாவின் பெரும் சறுக்கல்

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு கொழும்பை இணங்கி, இறங்கி வரச் செய்வதற்கு எல்லை மீறி அழுத்தத்தை அப்போது பிரயோகித்த புதுடில்லி, இலங்கையின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் மோசமாக மீறி நடந்துகொண்ட பாரத தேசம், இப்போது இலங்கையின் இறைமையை மீறி நடக்க முடியாது, அந்த நாட்டின் மீது எல்லை மீறி அழுத்தம் தர முடியாது என்றெல்லாம் தலைகீழாகத் தத்துவம் பேசுகின்றது. போதிக்கின்றது.

ஈழத் தமிழர்களை தங்களுடைய ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தையே முழுமையாக - அடியோடு - கைவிட அழுத்தம் கொடுத்து, அதற்காக ஒரு பெரும் ஆக்கிரமிப்பு யுத்தத்தையே தமிழர் தேசம் மீது திணித்த புதுடில்லி, இப்போது உருத்திராட்சப் பூனை போல நாட்டின் இறைமை என்று ஈழத் தமிழருக்கு உபதேசம் செய்கின்றது.

இந்தத் தலைகீழ் மாற்றத்துக்குக் காரணம் யாது? காலம் செய்த கோலம்தான்.

இந்தப் பின்னடைவுப் போக்குக் காரணம், சர்வதேச இராஜதந்திர அரசியலைக் கையாள்வதில் இந்த பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியான பாரதத்திற்கு ஏற்பட்ட படுதோல்விதான்.

இப்போது நாடு கடந்த பயங்கரவாதத்தை அனுமதிக்க மாட்டோம், அது இந்தியாவின் பண்பியல்பல்ல என்று பகட்டு வேடம் போடும் பாரதம்தான், எண்பதுகளில் பாக்கு நீரிணையைக் கடந்து ஈழத் தமிழ் போராளிகளை சட்டவிரோதமாகத் தன் நாட்டுக்குள் நுழைய வெற்றிலை வைத்து, அவர்களின் இயக்கப் பாசறைகளுக்கு சரணாலயம் அமைத்துக் கொடுத்து, அந்த இயக்கங்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆயுதங்கள் வழங்கி, கொழும்புக்கு எதிராகத் தமிழர் தேசத்தின் ஆயுதப் போராட்டத்திற்கு முழு உதவி, ஒத்தாசை, ஊக்கம் அளித்தது. அப்போது 'எல்லை தாண்டிய பயங்கரவாதம்' பற்றிய அறிவு புதுடில்லிக்கு இருக்கவில்லைப் போலும். இலங்கையின் தனித்துவ இறைமை பற்றிய புரிதலும் புதுடில்லிக்கு அச்சமயத்தில் விளங்கி இருக்கவில்லைப் போலும்.

ஈழத்தமிழர்களின்நலனைப்பாதுகாக்கவென்று முதலைக்கண்ணீர் வடித்தபடி, இலங்கையின் ஆள் புல ஒருமைப்பாட்டுப் பிரதேசத்துக்குள் தனது யுத்த விமானங்கள் மூலம் அத்துமீறி ஊடுருவி, உணவுப் பொருள்களை வீசி, இலங்கை மீதான தனது மேலாதிக்கத்தை வல்வந்தமாக புதுடில்லி திணித்துக் காட்டிய போது இலங்கையின் தனித்துவ இறைமை புதுடில்லி அரசுக்குப் புரிந்திருக்கவில்லை போலும்.

அமைதி காக்கும் படைகள் என்ற பெயரில் ஈழத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, தமிழ் போராளிகள் மீது பெரும் யுத்தத்தை ஏவிட்ட சமயம் இலங்கையின் நீதிமன்றங்கள் விடுத்த அழைப்பாணைகளைக் கூட இந்தியப் படைகள் கவனத்தில் எடுக்கவில்லை. இலங்கைத் தீவை ஆக்கிரமித்து நின்ற சமயம், இலங்கை நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்தை அத்தீவிலேயே புறக்கணித்து, உதாசீனம் செய்த போது இலங்கை நாட்டின் இறைமை புதுடில்லிக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. இன்று இலங்கையின் இறைமை பாரதத்திற்கு பெரிய விடயமாகக் கண்ணில் படுகிறது.

பகிரங்க அறிக்கைகள், மூடிய அறைக்குள் வாய்மூல வலியுறுத்தல்கள் ஆகிய ராஜதந்திர மொழிகள் மட்டுமே தங்களுக்குத் தெரியும், அது மட்டுமே தங்களின் பாசை என்றும், அதை மீறி எதுவும் செய்யோம் என்றும் நல்ல பிள்ளை கதை விடுகின்றது இந்தியா.

ஆம். உண்மைதான். அன்று ஆர்ப்பரித்த இந்தியா, இன்று இலங்கை விடயத்தில் அடங்கி, அமுங்கி, அமைதி காத்து, ஒழுங்காக நடக்க முயல்கின்றது.

அத்தகைய படிமானத்துக்குத் தனது ராஜதந்திரம் மூலம் புதுடில்லியை பணிய வைத்திருக்கின்றது கொழும்பு என்பதுதான் இதில் மறைமுக உண்மை.

இந்திய ராஜதந்திரிகளும், இன்று அரசியல்வாதிகளாகிவிட்ட ராஜதந்திரிகளும், ஊடகப்பீரங்கிகளும்இந்தியாவின்வலிமைகுறித்து என்ன பீற்றிக்கொண்டாலும், கொழும்பு விடயத்தில் சற்று அடக்கி, அமுக்கி, எகத்தாளம் தவிர்த்து, புதுடில்லி நடந்து கொள்கின்றது, அப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் நடைமுறை நிலைமை.

இப்பிராந்தியத்தில் பாரதத்துக்கு சவாலான சக்தியான சீனாவை அரவணைத்துத் தன் பக்கத்தில் நெருக்கமாக வைத்திருப்பதன் மூலம் பாரதத்திற்குப் பந்தா காட்டிக் கொண்டிருக்கின்றது கொழும்பு. எண்பதுகளில் ஈழத் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை தனது பகடைக் காயாக்கி, இலங்கைக்கு எதிரான சூதாட்டத்தைத் தந்திரமாக ஆடிய இந்தியா, இப்போது கொழும்பு அந்த ஆட்டத்தில் தனது வலுவான ஆதரவாளனாக மற்றொரு வல்லாதிக்க சக்தியான சீனாவை தனது துணைக்குக் கொண்டு வந்து தன் பக்கத்தில் நிறுத்தியதும், பதறிப் போய், அடித்து ஆடுவதைன் கைவிட்டு, தடுப்பாட்டத்தில் இறங்கி நிற்கின்றது. அதுதான் இப்போதைய உண்மை நிலைமை.

இந்த சர்வதேச சக்திகளின் போரியல் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளாமல், இலங்கை போன்று ராஜதந்திரப் போரை சாணக்கியமாக முன்னெடுக்காமல், தொப்புள்கொடி உறவு என்று பாரதத்தை நம்பி இருந்தமையால், இன்று நட்டாற்றில் தனித்து நிற்கின்றனர் இலங்கைத் தமிழர்கள்.

இன்றைய இந்த உண்மை நிலையை நேரத்துடன் தீர்க்கதரிசனமாக உணர்ந்து கொண்டிருந்தமையால்தான் தங்கள் மீது ஆக்கிரமிப்பு படையாக இந்தியா திணித்த யுத்தத்தை துணிச்சலுடன் புலிகள் எதிர்கொண்டார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.




# 27, 28 ஆம் திகதிகளில் யாழ். சட்ட மாநாடு!

யாழ்ப்பாணம் சட்ட மாநாடு எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சட்டத்துறையானது 2005 ஆம் ஆண்டிலிருந்து சட்டமாணிப் பட்டத்தை வழங்குகின்ற ஒரு உயர் கல்வி நிறுவனமாக இயங்கி வருகின்றது. அதன் கல்விப்பணியின் பிறிதொரு மைல்கல்லாக யாழ்ப்பாணத்தில் சட்ட மாநாடு ஒன்றை நடத்த விரும்பியது. அதற்கமைய இந்தியாவின் புகழ் பெற்ற சுரனா மற்றும் சுரனா சர்வதேச வழக்கறிஞர்கள் நிறுவனத்துடன் இணைந்து இம்மாதம் 27 ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கத்தில் யாழ்ப்பாணம் சட்ட மாநாடு என்னும் பெயரிலான மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சட்ட மாநாடானது நெருக்கடிகளுக்கூடான வழிகள் என்னும் தொனிப்பொருளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டின் நோக்கங்களாகச் சட்டப் பரப்பில் அதிகம் பேசப்படாத விடயங்களைப் பேசுதல், பன்மைத்துவ ஆய்வை ஊக்குவித்தல், அவ்வகை ஆய்வு முயற்சிகளை கலந்துரையாடுவதற்கான களமொன்றை அமைத்தல், சட்டப் புலமையாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரையும் அவர்களின் ஆய்வுச் சிந்தனைகளையும் ஒன்றிணைத்தல், எழுத்திலுள்ள சட்டத்துக்கும் அதன் செயற்பாட்டுக்குமான இடைவெளியைக் குறைத்தல், சட்ட மாணவர்களுக்குச் சட்டத்துறை சார் ஆய்வுச் சிந்தனைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் துறைசார் நிபுணர்களுடனான வலையமைப்பை ஏற்படுத்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

முதல் நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் மாண்புமிகு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணமும், கௌரவ விருந்தினராக ஐக்கிய நாடுகளின் முன்னாள் நேருதவிச் செயலாளரும் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியுமான கலாநிதி ராதிகா குமாரசுவாமிவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதல் நாள் நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக இலங்கையின் புகழ்பூத்த ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கனகீஸ்வரன் மற்றும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் சொர்ணராஜா ஆகியோரின் திறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

“இலங்கையில் பகிரங்க சட்டத்தின் எதிர்காலம்: நெருக்கடிகளும் சவால்களும்“ என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்வொன்றும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நாள் நிகழ்வில் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு யசந்த கோதாகொட பிரதம விருந்தினராகவும், அரசமைப்புச் ச ட்ட நிபுணர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்

இரண்டாம் நாள் நிகழ்வின் சிறப்பம்சமாக அமெரிக்காவின் யாலே பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைத் துணைப் பேராசிரியர் திரு ரோஹித் டேவும், சுரனா மற்றும் சுரனா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்தின் முகாமைத்துவப் பங்காளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி வினோத் சுரனாவும் திறப்புரைகள் ஆற்றவுள்ளனர்.

அத்துடன் இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மேலெழுவதற்கான சட்டத்தின் வகிபாகம் என்னும் தலைப்பிலான கலந்துரையாடலானது இரண்டாம் நாளின் மற்றொரு சிறப்பு நிகழ்வாகும்.

மாநாட்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆயுவுக் கட்டுரைச் சுருக்கங்கள் இரண்டு நாள் அமர்வின் போதும் ஆய்வாளர்களால் வாசிக்கப்படவுள்ளமையும் யாழ்ப்பாணம் சட்ட மாநாட்டின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

சமகாலப் பிரச்சினைகளினை முன்னிறுத்தியதாக பல்வேறு சட்ட விடயங்களை ஆராய்ந்து அதனூடாக இலங்கையின் வடபிராந்தியத்தின் பொருளாதார, சமூக விடயங்களை வினைத்திறனாக அணுகும் தன்மையிலும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சட்ட மாநாட்டில் பங்குபற்றிப் பங்காளிக்குமாறு ஆர்வமுள்ளோர் அனைவரையும் பணிவன்புடன் அழைத்து நிற்கின்றோம். - என்றுள்ளது.



# மக்களவைத் தேர்தலில் மேற்கு வங்கத்தில் தனித்து போட்டியிடும் திரிணாமூல் காங்கிரஸ்



மக்களவைத் தேர்தலில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சி மேற்கு வங்கத்தில் தனித்து போட்டியிடும் என்று அக்கட்சியின் தலைவரும், மாநில முதல்வருமான மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

இந்த நகர்வு, 'இண்டியா' கூட்டணிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

இது தொடர்பில் மம்தா பானர்ஜி மேலும் தெரிவிக்கையில்,

"காங்கிரஸ் கட்சியுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை.

நான் ஏற்கனவே மேற்கு வங்கத்தில் நாங்கள் தனித்து போட்டியிடுவோம் என்று கூறி வந்தேன். நாட்டில் என்ன நடக்கும் என்பது பற்றி எங்களுக்கு கவலை இல்லை.

நாங்கள் மதசார்பற்ற கட்சி. மேற்கு வங்கத்தில் பாஜகவை நாங்கள் தோற்கடிப்போம்.

காங்கிரஸ் முன்வைத்த அனைத்து முன்மொழிவுகளையும் அவர்கள் நிராகரித்தார்கள். அதனைத் தொடர்ந்து மேற்கு வங்கத்தில் தனித்து போட்டியிடும் முடிவை நாங்கள் எடுத்தோம்.

நாங்கள் இண்டியா கூட்டணியில் இருக்கும் நிலையிலும், ராகுல் காந்தியின் யாத்திரை மேற்கு வங்கம் வழியாக செல்வதை மரியாதைக்காக கூட எங்களுக்குத் தெரிவிக்கவில்லை.

அவர்களுக்கு எங்களுடன் எந்த உறவும் இல்லை. மாநிலக் கட்சிகள் பலமாக உள்ள மாநிலங்களில் அவை தனித்துப் போட்டியிட வேண்டும்.

காங்கிரஸ் கட்சி மற்ற இடங்களில் போட்டியிடலாம் என்று நாங்கள் ஏற்கெனவே தெரிவித்திருந்தோம்."– என்றார்.



## அயோத்தி ராமர் கோயில் திறப்பை தி.மு.க. அரசியல் ஆக்குகின்றது

### புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை விமர்சனம்

"முழுமையடையாத சட்டப்பேரவையை திறந்தவர்கள், ராமர் கோயில் திறப்பை அரசியலாக்கிக் கொண்டிருக்கிறார்கள்."

– இவ்வாறு புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை விமர்சித்துள்ளார்.


உத்தரப் பிரதேச மாநில உதய நாள் கொண்டாட்ட நிகழ்ச்சி புதுச்சேரி துணைநிலை ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

"உத்தரப் பிரேதசத்தில் மிகப் பெரிய வரலாற்று நிகழ்வை நாம் பார்த்தோம். ராமர் கோயிலில் பால ராமர் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இங்கு நடந்த உத்தரப் பிரதேச மாநில உதய நாள் நிகழ்வில் அதனை நினைவுகூர்ந்தனர்.

கருணாநிதி புதிய சட்டப்பேரவை கட்டடத்தை மன்மோகன் சிங்கை வைத்து திறந்தார். அப்போது அதற்கு கூரையே போடவில்லை. ஷெட் அமைத்து திறந்தனர். முழுமையடையாத சட்டப்பேரவையை திறந்தவர்கள் இன்று மக்கள் சேர்ந்து உணர்வுபூர்வமாக திறந்ததை இப்படி கூறுகின்றனர். ராமர் கோயில் திறப்பையும் அரசியலாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சிவா உள்ளிட்டோர் தயவு செய்து குடியரசு தின விழாவை முன்னிட்டு நடத்தப்படும் தேநீர் விருந்தை அரசியலாக்க வேண்டாம். ஆளுநர் விருந்தை ஆளுநர் விருந்தாக பாருங்கள். அரசியல் விருந்தாக பார்க்க வேண்டாம்" –என்றார்.

## திருச்சி அகதிகள் முகாமில் சாந்தனின் உடல்நிலை பாதிப்பு!



திருச்சி அகதிகள் சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சாந்தனின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது என சிறைக் கைதிகள் உரிமை மையம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

சாந்தனிற்கு கல்லீரல் மற்றும் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அந்த மையம் குறிப்பிட்டுள்ளது.

திருச்சி சிறப்பு முகாமில் சாந்தனிற்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை எனவும் இதன்காரணமாக அவருக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் சென்னை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை வழங்கவேண்டும் என சிறைக் கைதிகள் உரிமை மையம் தமிழக முதலமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று தற்போது பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலையான சாந்தன் இலங்கை வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ரஷ்ய இராணுவ விமானத்தை சுட்டுவீழ்த்தியது உக்ரைன்!

## 74 போர் உயிரிழப்பு



உக்ரைனிய போர்க் கைதிகளை ஏற்றிச் சென்ற ரஷ்ய இராணுவ விமானம் ரஷ்யாவின் பெல்கொரோட் பகுதியில் விபத்துக்குள்ளான தாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெளிநாட்டு ஊடகங்களின் தகவலின் படி,65 உக்ரைனியர்கள் உட்பட விமானத்தில் இருந்த 74 பேரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கைதிகளை பரிமாறிக்கொள்வதற்காக கொண்டு செல்லப்பட்ட போது விமானம் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலியுஷின்-76 என்ற மேற்படி விமானம் வானத்தில் இருந்து விழுந்து தரையில் மோதியபோது வெடித்துச் சிதறிய காணொளிகள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவின் எஸ் -300 வான் பாதுகாப்பு அமைப்புகளுக்கான ஏவுகணைகளை விமானம் கொண்டு சென்றதாக உக்ரைன் பிராவ்டா இணையதளத்தை மேற்கோள்காட்டி உக்ரைனின் படை தலைமையகம் தெரிவித்தபோதிலும் போர் கைதிகள் பற்றி எதுவும் குறிப்பிடப்பட வில்லை.

# தென்கொரியா மீது வடகொரியா ஏவுகணை தாக்குதல் நடத்தியது





ரஷ்ய-உக்ரைன் யுத்தம், இஸ்ரேல்-காசா மோதல் என உலக ளாவிய ரீதியில் பதற்றம் அதிகரித்துவரும் நிலையில் தற்போது தென்கொரிய இராணுவம் மீது வடகொரியா ஏவுகணை தாக்கு தலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் பிராந்தியத்தில் மற்றுமொரு போர் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மஞ்சள் கடல் பகுதியில் தென் கொரிய இராணுவத்தை நோக்கி வடகொரியா நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்திய தாக தென் கொரிய இராணுவத்தின் கூட்டுப்படைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கப்பல்கள் மூலம் இந்த ஏவுகணை தாக்குதல் நடத் தப்பட்டதாக தென் கொரிய இராணுவம் தெரிவித்துள் ளது.

இந்த தாக்குதலின் விவரங்கள் குறித்து தென் கொரியா மற்றும் அமெரிக்காவின் உளவுத்துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

அத்துடன், வடகொரிய இராணுவத்தின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்க அமெரிக்காவுடன் நெருக்கமாக பணியாற்றி வருவதாகவும் தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.




# துணுக்காய் நர்மதா நதீஸ்வரர் கோவில் காணிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## வடக்கு மாகாண ஆளுநர் உறுதி தெரிவிப்பு

முல்லைத்தீவு துணுக்காய் பாண லிங்கேஸ்வரம் அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன் கோவிலின் காணிப் பிரச்சினை தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் தெரிவித்தார்.

ஆலயத்தின் நான்கு திக்கு இராஜ கோபுரங்களுக்குமான அடிக்கல் நாட்டும் நிகழ்வும், திருக்குடமுழுக்கு நன்னீராட்டுவிழாவும் நேற்றய் இடம்பெற்றன.

இராஜ கோபுரங்களுக்களுக்கான அடிக்கல் நாட்டுவிழாவின் பிரதம அதிதியாக வடக்குமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார். ஆலய காணிப்பிப்பிரச்சனை உள்ளிட்ட சிக்கல்கள் தொடர்பில் இதன்போது ஆலய நிர்வாகத்தினரால் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

நர்மதா நதீஸ்வரர் சிவன் கோவிலின் காணிப்பிரச்சனை தொடர்பில் தனக்கு ஏற்கனவே தகவல் கிடைத்துள்ளதாகவும் அது தொடர்பில் தாம் உரிய நடவடிக்கை எடுப்பார் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய நல்லிணக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், மக்களின் காணிப்பிரச்சினை, வீட்டுப்பிரச்சினை உள்ளிட்ட சிக்கல்களை தீர்ப்பதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் ஆளுநர் இதன் போது குறிப்பிட்டார்.









# படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கும் எண்ணம் இருக்கிறதா?

## நாடாளுமன்றத்தில் சாணக்கியன் கேள்வி

- ந.லோகதயாளன் -

படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கான எண்ணம் இருக்கிறதா? இல்லையா? – இவ்வாறு பாதுகாப்பு அமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றையதினம் கேள்வி – பதிலின் போதே இக்கேள்வியை அவர் எழுப்பினார்.

இதன்போது வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் முடிந்து தற்போது 15 வருடங்கள் முடிவடையப் போகின்றது. 15 வருடங்களுக்குப் பின்னரும் – குறிப்பாக வடக்கு,கிழக்கு மாவட்டங்களில் மாத்திரம் இராணுவ முகாம்களைப் பாதுகாப்புக் கருதி வைத்திருக்கின்றோம் எனக் கூறுவதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

குருக்கள்மடம் பாடசாலைக்குரிய மைதானக் காணி இராணுவ கட்டுப்பாட்டினுள் இல்லை எனக் கூறினாலும், தற்போது வரை அன்மைதான காணி இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. முறக்கொட்டாஞ்சேனையில் இராணுவ முகாம் அமைந்திருக்கும் பாடசாலைக்குப் பதிலாக பிறிதொரு பாடசாலையை அமைத்ததாகக் கூறியுள்ளீர்கள். புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலை ஆற்றோரப் பிரதேசத்தில் காணப்படுகின்றது. இதனை அக்கிராமப் பெற்றோர்களோ, பிள்ளைகளோ விரும்பவில்லை. தற்காலிகமான மாற்று வழியாக அப்பாடசாலையை பயன்படுத்தினாலும் தொடர்ந்து அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

முறக்கொட்டாஞ்சேனையில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள பாடசாலை பாதுகாப்பிற்கு முக்கியம் எனக் கருதுகின்றீர்கள். கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரை நீங்கள் பயணம் செய்யவில்லை என்று நினைக்கின்றேன். ஏனெனில் பொலன்னறுவை – மன்னம்பிட்டி வரை ஏராளமான காணிகள் உங்களது இராணுவ முகாம்களை அமைப்பதற்கு காணப்படுகின்றன. அவ்வாறிருக்க நீங்கள் கிராமத்தின் நடுப்பகுதியில் இருக்கும் காணியே முக்கியம் எனக் கருதுவதை நாங்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?



வடக்கில் பலாலி பிரதேசத்தில் கூட மக்களுடைய நிலங்களில் இராணுவத்தினர் உள்ளனர். நிலத்திற்கு உரிமையுடைய மக்கள் வேலியால் அதைப் பார்க்கும் வண்ணம் படையினர் அதில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். மக்களுடைய காணிகளை இராணுவத்தினர் அபகரித்துள்ளனர். ஜனாதிபதியிடம் ஒவ்வொரு முறையும் சந்தித்து இது தொடர்பில் பேசும் போது ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சரிடம் "ஏன் இன்னும் இந்த காணிகள் விடுவிக்கப்படவில்லை?" எனக் கேள்வி எழுப்புவார். ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்து ஒரு விடயத்தைக் கூறினால், பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி கூறாத விடயங்களையே செய்கின்றார்.

"இதில் உண்மை பேசுவது ஜனாதிபதியா? அல்லது பாதுகாப்பு அமைச்சரா?" இதுவே என் முதற் கேள்வி.

சுனாமியின் காரணமாக இராணுவ முகாம்களை பாடசாலைக்குக் கொண்டு சென்றார்கள். ஆனால் மைதானங்களை தூக்கிக் கொண்டு செல்ல முடியாது. கல்வி கற்பிப்பது என்பது ஒரு கட்டடத்தினுள் மேற்கொள்ளும் விடயமன்று. அதற்கு சிறந்த இடவசதிகள் தேவை. பாடசாலையை பிரதான வீதியில் கட்டுவதற்கு மைதானத்தைக் கொண்டு செல்ல முடியாது. பாதுகாப்பு தொடர்பான விடயங்களுக்காக வேறு காணிகளை உங்களால் பெற்றுக் கொள்ள முடியும். காயங்கேணி பகுதியில் கடற்படை செயற்பாடுகளுக்கு காணி வேண்டும் எனக் கூறி காணிகளை அபகரிக்கின்றனர். பாலையடிவட்டை, தாண்டியடி போன்ற இடங்களிலும் காணி அபகரிப்பு நடைபெற்ற வண்ணமே இருக்கின்றது. ஆகவே "இந்த காணிகளை விடுவிப்பதற்கான எண்ணம் உங்களிடம் இருக்கிறதா? இல்லையா?" என்ற இவ்வாறான கேள்விகள் இன்றைய தினம் பாதுகாப்பு அமைச்சரிடம் எழுப்பப்பட்டது.

# பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ பிரதி பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு



பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

அவர் குற்றவியல் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தாம் பொலிஸ் ஊடகப்பேச்சாளராகத் தொடர்ந்தும் செயற்படுவார் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.

# மாணவனின் மர்ம உயிரிழப்பு விவகாரம்

# மத்ரஸா குறித்து ஆராய குழு நியமிப்பு



(பாறுக் ஷிஹான்)

மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பான சம்பவம் தொடர்பில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் விசாரணை மேற்கொள்வதற்காக ஐவர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சந்தை வீதியில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் நடத்தப்படும் மத்ரஸா ஒன்றில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதியன்று மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடிப் பகுதியைச் சேர்ந்த எம். எஸ். முஸ்அப் (வயது-13) எனும் மாணவன் தூக்கில் தொங்கி உயிரிழந்ததான எனத் தெரிவிக்கப்பட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் ஜனாஸா ஒப்படைக்கப்பட்டது.

மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து பொது மக்கள் ஒன்று கூடி மத்ரஸாவின் நிர்வாகி மீது தாக்குதல் மேற்கொள்ள தயாராகிய வேளை மேலதிக பொலிஸார் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்டனர். சாய்ந்தமருது பொலிஸாரால் மத்ரஸா நிர்வாகியாகிய மௌலவி கைது செய்யப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்டு வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டு மன்றின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து தற்போது நீதிக்கான மய்யம் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயில் உள்ளிட்ட இதர தரப்பினரால் முஸ்லீம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய குறித்த மத்ரஸா தொடர்பில் அக்குழு துரித விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

இவ்விசாரணையை முன்னெடுக்கும் குழுவில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் அதிகாரி மற்றும் 4 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கம் வகிக்கின்றனர். அக்குழு விசாரணை நடத்தி வருகின்றது. இவ்விடயம் தொடர்பில் முழுமையான அறிக்கை ஒன்றினையும் அக்குழுவினர் வெளியிடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 4 சட்டமூலங்களில் கையொப்பமிட்டு சான்றுப்படுத்தினார் சபாநாயகர்

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட நான்கு சட்டமூலங்களில் கையொப்பமிட்டு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சான்றுப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று கூடியபோது, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனை அறிவித்தார்.

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலக சட்டமூலம், மத்தியஸ்த சபை திருத்தச் சட்டமூலம், அற்றோணித் தத்துவ திருத்தச் சட்டமூலம் மற்றும் மோசடிகளைத் தடுத்தல் திருத்தச் சட்டமூலம் ஆகியன சபாநாயகரினால் சான்றுப்படுத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அவை சட்டங்களாக அமுலுக்கு வந்துள்ளன என நாடாளு மன்ற தொடர்பாடல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருகோணமலை நகரத்தில் சனியன்று உழவர் திருநாள்

(ஏ.எச்.ஹஸ்பர்)



உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையும் திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகமும் இணைந்து நடாத்தும் உழவர் திருநாள் விழா எதிர்வரும் சனிக்கிழமை 27 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தமிழர் கலை பண்பாட்டுப் பேரவையின் இலங்கைக் கிளையின் தலைவர் சுந்தரம் சிவபாலன் தலைமையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம் பெறும்.

இவ் நிகழ்வின் ஆன்மீக அதிதிகளாக திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்களும், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இமானுவல் ஆண்டகையும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

மேலும் நிகழ்வின் முதன்மை அதிதியாக உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் தலைவர் த.மகிபாதேவனும் சிறப்பு அதிதியாக திருகோணமலை நகராட்சி மன்றத்தின் செயலாளர் வெ. இராஜசேகரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

திருமதி சிவதர்ஷினியின் மாணவிகளின் வரவேற்பு நடனமும், திருகோணமலை பொது நூலகத்தின் நூலக உதவியாளர் அ.அச்சுதனின் வரவேற்புரையும், சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவத்தின் சிறப்புரையும், பாரதி தமிழ் வித்தியாலய மாணவர்களின் உழவர் நடனம் உட்பட பல நிகழ்வுகளும் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த யாழில் விழிப்புணர்வுப் பவனி!

-எஸ்.நிதர்ஷன்-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நடைபவனி நேற்று இடம்பெற்றது.

வடமாகாண சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நேற்றுக் காலை திருநெல்வேலி சந்தியில் ஆரம்பித்த டெங்கு நோய் விழிப்புணர்வு நனடபவனி பலாலி வீதி வழியாக பரமேஸ்வரா சந்தியை அடைந்து அங்கிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதானநுழை வாயில் வரை இடம்பெற்றது.

விழிப்புணர்வு நடைபவனியில் வடமாகாண சுகாதார பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி, கோப்பாய் பொலிஸார், சுகாதார பரிசோதர்கள், மருத்துவ மாதுக்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள், நல்லூர் பிரதேச சபையினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இதன்போது டெங்கு நோய் தொடர்பான பதாதைகளும் காட்சிப்படுத்தப்பட்டமையுடன், பொது சுகாதார பரிசோதகர்களால் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.














# முருகனுக்கு உகந்த தைப்பூச திருநாள் இன்று

- எஸ்.ரியானா -

சந்திரன் கடகத்தில் தனது சொந்த வீட்டில் ஆட்சி பலத்துடன் பூச நட்சத்திரத்தில் இருந்து மகர ராசியில் இருக்கும் சூரியனை பார்க்கும் நாளே தைப்பூசம். சக்தியின் வெளிப்பாடும், தெய்வாம்சமும் பொருந்திய காலம் தை மாதம். தைப்பூச நாள் சிவன், அம்பாள், முருகனுக்கு உகந்த நாளாகும்.

மேலும், ஆன்மிக ஜோதி வள்ளலார் அருட்பெருஞ் ஜோதியில் கலந்து மகா சமாதியான நாளும் இந்நாள்தான். தீப தரிசனம், ஜோதி தரிசனம் என்பன இந்துக்களின் முக்கிய வழிபாடுகளில் ஒன்று. தினசரி கோயிலுக்கு சென்றாலும், செல்லாவிட்டாலும் வீட்டில் காலை, மாலை இரு வேளையும் காமாட்சியம்மன் விளக்கு அல்லது குத்து விளக்கு ஏற்றி வைத்து அந்த ஜோதியை வணங்குவது பல காலமாக உள்ள சாஸ்திர சம்பிரதாய வழக்கம்.

ஆலயத்தில் இறைவனைத் தரிசித்த பின்னர் கற்பூர ஜோதியை வணங்கி கண்களில் ஒற்றிக் கொள்வது ஆலய வழிபாடுகளின் முக்கிய அம்சம்.வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் ஜோதி தரிசனத்தையும், இறைவன் ஜோதி சொரூபியாக உள்ளான் என்பதையும், அன்ன தானத்தின்மகிமையையும்உணர்த்தியுள்ளார். மேலும் மரணமில்லாப் பெருவாழ்வு அடைந்து மீண்டும் பிறவாமல் இருக்கப் போதனை செய்துள்ளார்.

### தைப்பூசத்தின் சிறப்புகள்

மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் சிவபெருமான் தனியாக நடனம் புரிவார். நடன நிலையில் உள்ள சிவனை, நடராஜர் என வணங்குகிறோம். தைப்பூசத்தன்று உமாதேவியுடன் இணைந்து நடனம் ஆடுகிறார். இந்த நிலையை உமா மகேஸ்வரர் என்றழைக்கிறோம்.

ஆகவே இந்த தைப்பூச திருநாள் சிவசக்திக்கு உகந்த நாளாகும். தேவ குருவான பிரகஸ்பதிக்கு பூசம் நட்சத்திரம் என்பதால் அன்றைய தினம் குரு வழிபாடு செய்வதும் சிறப்பு. பூச நட்சத்திர நாள் காவடி பிரியன் கந்தனுக்கு மிகவும் விசேஷமான நாள். இந்நாளில்தான் முருகப் பெருமான் வள்ளியை மணமுடித்தார். தாரகாசுரனை வதம் செய்ய தாய் பார்வதியிடம் வேல் வாங்கிய நாள்.

இந்நாளில் அனைத்து முருகன் ஸ்தலங்களிலும் விசேஷ பூஜைகள் நடைபெறும். இந்த நாளை காணிக்கை செலுத்தும் நாளாக முருக பக்தர்கள் கொண்டாடுகிறார்கள். பழங்கள், நெல், காய்கறிகள் எது விளைந்தாலும் அதை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதற்காகவே காவடிகளில் அவற்றை வைத்து எடுத்து செல்வார்கள். ஆடு, மாடு, கோழி, சேவல், மயில் போன்ற ஜீவராசிகளை கோயிலுக்கு அர்ப்பணித்தல், நேர்ந்து விடுதல் போன்ற வழிபாடுகளை தைப்பூச நாளில் நிறைவேற்றுவார்கள்.

இந்த நாளில் உடலை வருத்தி நடைபயணம் மேற்கொண்டு முருகப் பெருமானை தரிசிப்பார்கள்.

இலங்கையின்கிழக்கில்உகந்தை ஸ்ரீ முருகன் ஆலயம், ஆலையடி வேம்பு ஸ்ரீமுருகன் ஆலயம், மண்டூர் ஸ்ரீமுருகன் ஆலயம், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம், பனங்காடு ஸ்ரீபாசுபதேஸ்வரர் ஆலயம் மற்றும் தமிழகத்தில் உள்ள அறுபடை வீடுகளில், மருதமலை, சிக்கல், வயலூர், குன்றக்குடி, வல்லக்கோட்டை, திருப்போரூர், குன்றத்தூர், வடபழனி என அனைத்து முருகன் கோயில்களிலும் அபிஷேக ஆராதனைகள் விமரிசையாக நடைபெறும்.

முருகப் பெருமானை துதித்து வள்ளலார் பாடிய பாடலை இந்த நன்னாளில் நாமும் பாடி சகல நலன்களும் பெறுவோம்.




# கணக்காய்வாளர் திணைக்களத்தில் நானூறு பதவிகளுக்கு வெற்றிடங்கள்

கணக்காய்வு அதிகாரிகளுக்கான சுமார் 400 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன என கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கணக்காய்வு நடவடிக்கைகளை அதிகபட்ச முகாமைத்துவத்துடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதாக, கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன குறிப்பிட்டுள்ளார்.

கணக்காய்வு அதிகாரி பதவிக்கு பொருத்தமானவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, உரிய தகுதிகளுடன் தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன என கணக்காய்வாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# 60 வகை மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சு தகவல்

இலங்கையின் மருத்துவக் கட்டமைப்பில் 60 வகையான மருந்துகளுக்குல தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பற்றாக்குறையாகவுள்ள சகல வகையான மருந்துகளும் தற்போது முன்பதிவு செய்யப்பட்டுள்ளன என மருந்து விநியோகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அந்த மருந்துகள் சில வாரங்களுக்குள் கட்டம் கட்டமாக நாட்டிற்கு கொண்டுவரப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து தற்போது அதிகளவு மருந்துகள் கொள்வனவு செய்யப்படுகின்றன எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# ரயில்வே திணைக்கள மறுசீரமைப்புக்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை தயார்




ரயில்வே திணைக்களத்தை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அதற்காக நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தின் செயற்றிறனை அதிகரிப்பதற்காகவும் நட்டத்தைக் குறைப்பதற்காகவும் அந்த அறிக்கையில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன் சந்திர தெரிவித்துள்ளார்..

இந்த அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளிக்கப்படவுள்ளது.

ரயில்வே திணைக்களத்தினால் மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவது தொடர்பான யோசனைகள் அந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளன என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.



# படுகொலையுண்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் நினைவு தினம் நேற்று மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு!

(பழுவூரான்)

திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் சுகிர்தராஜனின் 18 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுப் புதன்கிழமை மட்டக்களப்பு காந்திப் பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவு தூபியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் மற்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பனவற்றின் இணை ஏற்பாட்டில் இந் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நினைவேந்தல் நிகழ்வில், இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் சுகிர்தராஜனின் நினைவாக ஊடகவியலாளர்களால் அகல் விளக்கேற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அத்தோடு அவரின் திருவுருவப் படத்திற்கு மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஸ்ணகுமார் மற்றும் முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் சிவம் பாக்கியநாதன் ஆகியோர் இணைந்து மலர் மாலை அணிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ் நிலாந்தன் குறிப்பிட்டவை வருமாறு:-

நாம் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி ஆண்டு தோறும் நினைவேந்தலில் ஈடுபடுகிறோம். ஆனால் அவர்களுக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை. அத்தோடு அரசினால் கொண்டு வரப்படவுள்ள ஊடகங்களை அடக்கும் சட்டத்தினால் ஊடகவியலாளர்கள் வீட்டுக்குள்ளேயே அடங்க வேண்டிய நிலை உருவாகும்.- என்றார்.

இந்நிகழ்வில் மாவட்டத்திலுள்ள பெருமளவிலான ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.













# இன்றைய ராசி பலன்கள் - 25.01.2024




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. நல்ல இசையைக் கேட்பதன் மூலம் உங்கள் மனதை மகிழ்ச்சியாக வைத்திருக் கலாம்.உணர்ச்சி வசப்படாமல் இருங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். திறமையாகப் பணியாற்ற யதார்த்தமான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். சகஜமான அணுகுமுறையைக் கையாளவும்.

இன்று அதிகமான செலவினங்கள் காணப்படும். பணத்தட்டுப்பாடு இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் தொந்தரவுகள் காணப்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று அதிர்ஷ்டங்கள் நிரம்பிய நாளாக இருக்கும். உங்கள் தனித்திறமை மற்றும் உற்சாகத்தின் மூலம் உங்கள் இலக்கு களை அடைவீர்கள். இதனால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக் கும். அந்த வாய்ப்புகளை வெற்றிகரமாகப் பயன்படுத்து வீர்கள்

உங்கள் குடும்பத்தில் நல்ல விஷயங்கள் நடக்கும். உங்கள் துணையுடன் பயனுள்ள நேரத்தைக் கழித்து மகிழ்ச்சியான தருணங்களைக் கொண்டாடுவீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்விற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் சம்பளம் உயரும்.

இன்று எந்தவிதமான ஆரோக்கிய குறைபாடும் இருக்காது. நீங்கள் உற்சாகத்துடன் காணப்படுவீர் கள்.




இன்று சாதகமான விளைவுகள் காணப்படாது. அதிர்ஷ்டத்தை விட உங்கள் சுய முயற்சியில் நம்பிக்கை வையுங்கள். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று இறுக்கமான பணிச்சூழல் காணப்படும். அமைதியான நிலை காணப்படாது. உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து செயலாற்றுங்கள்.

உங்களிடம் காணப்படும் பதற்றம் உறவினைப் பாதிக்கும். அமைதியாக இருந்து எதையும் சகஜமாக எடுத்துக்கொள்ளுங்கள்.

பண வருவாய் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களைக் கவலைப்பட வைக்கும்.

இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் மனதில் பதற்றம் உண்டாகும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம்அதனை நீங்கள் சமாளிக்கலாம். நீங்கள் பல பணிகளில் மும்மரமாகக் காணப்படுவீர்கள்.

பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. மேலும் தவறுகள் நேராமல் இருக்க உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

தற்புகழ்ச்சிகளைத் தவிர்க்க வேண்டும். வார்த்தைகள் கவனமின்றி உதிர்க்கும் வாய்ப்புள்ளதால் அமைதியாக இருக்க வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் தேவைகளைச் சமாளிக்க பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளித் தொந்தரவுகள் காணப்படும்.




தேவையில்லாத மனக் கவலைகள் வருத்தத்தை அளிக்கும். அம்மாதிரியான கவலைகளைத் தவிர்ப்பது நல்லது. பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபடுவது நல்லது.

பணி இறுக்கமாகக் காணப்பட்டாலும் குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பீர்கள். பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மனக் குழப்பங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியைத் தக்க வைக்க மனதை அமைதியாக வைத்திருங்கள்.

பணப் புழக்கம் குறைவாகக் காணப்படும். பண இழப்புக் காணப்படும். இது ஏமாற்றத்தைத் தரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அனுகூலமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை நோக்கி நம்பிக்கையுடன் செயல்படு வீர்கள். சரியாக திட்டமிட்டால் இன்று வெற்றி காணலாம்.

உங்கள் பணியிடத்தில் உற்சாக மான வாய்ப்புகள் காணப்படும். இனிமையான சூழல் காணப்படும். பணியை விரும்பிச் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர் கள். இனிமையான வார்த்தைகளைப் பேசி உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை நல்ல விஷயங்களுக்காகப் பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று சிறந்த ஆற்றலுடன் காணப் படுவீர்கள். எதிர்பாராத வெற்றிகள் உங்களுக்குத் திருப்தியை அளிக்கும். விருந்தாளிகள் வருகை மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் பணி சலிப்பைத் தருகிறது என்பதை உணர்வீர்கள். இறுக்கமான வேலை காரண மாக பணிகள் நிலுவையில் இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவு நல்லுறவாகக் காணப் படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கான ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வடிவில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படும். சிறந்த தேக ஆரோக்கியத்தைப் பராமரிப்பீர்கள்.




இன்று சவால்களைப் பொறுமை யுடன் கையாள வேண்டிய சூழ்நிலை காணப்படும். உங்கள் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்படும். அதிகமாகச் சிந்திப்பதைத் தவிர்த்து ஆக்கபூர்வமாகத் தெளிவுடன் சிந்தியுங்கள்

அதிக வேலை காரணமாக தவறுகள் ஏற்படலாம். கவனமாக பணிகளை கையாள வேண்டும். பணிகளை முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும்.

இன்று உங்களிடம் உணர்ச்சிவசப்பட்ட அணுகுமுறை காணப்படும். இது புரிந்துணர்வைப் பாதிக்கும். அமைதி யாக நட்பான அணுகுமுறை தேவை

இன்று பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்களின் பிரியமான ஒருவருக்காக நீங்கள் செலவு செய்ய நேரலாம். உங்களிடம் காணப்படும் பதற்றம் காரணமாக உங்கள் தொடைகளில் வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.01.2024




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். ஏற்படும் சவால்களை அமைதியுடன் மேற்கொள்ளவும்.

பணிகளை முடிப்பதற்கான உங்கள் திட்டங்கள் செயல் வடிவம் பெறும். உங்கள் சக பணியாளர்களை விட நீங்கள் நன்கு பணியாற்றுவீர்கள்

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையைச் சமாளிப்பது கடினம். நீங்கள் உங்கள் எல்லா வேறுபாடுகளையும் ஒதுக்கி விட்டு நட்புடன் பழக வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் ஏற்படும். இன்று உங்களால் சேமிக்க இயலாது.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று அதிர்ஷ்டகரமான நாள். கடினமான செயல்களையும் உங்கள் திறமை மூலம் எளிதாக முடிப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அது நற்பலன்களைத் தரும். நீங்கள் திறம்பட செயலாற்றுவீர்கள். அது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்று மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருப்பதாக உணர்வீர்கள். இன்று போதிய அளவு பணம் சம்பாதிக்க இயலும்.

உங்களிடம் காணப்படும் நேர்மறையான சிந்தனை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய நாள் நற்பலன்களை அள்ளித் தரும். இன்று உங்கள் தன்னம்பிக்கை உயரும் வகையில் மாற்றங்கள் ஏற்படும். முக்கியமான முடிவுகளை கவனமாக எடுக்கவும்.

உங்கள் சக பணியாளர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வதாக உணர்வீர்கள். அவர்களை பொறுமையுடனும் திறமையுடனும் கையாள வேண்டும்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு விழா பற்றிய விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள். அதனை நடத்துவதற்கு பெரியவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை அவர்களுக்கு திருப்தியை அளிக்கும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சுய தேவைகளுக்காகப் பணத்தைப் பயன்படுத்துவீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக அமையாது. உங்கள் தினசரி நவடிக்கையில் கவனமாக இருக்க வேண்டும். பிரச்சினைகளைத் தவிர்க்க உரையாடுவதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறைகள் யோசித்து உரையாட வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடுவது மன ஆறுதலைத் தரும்.

உங்கள் சக பணியாளர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவீர்கள். இதனால் வேலை இழக்க நேரலாம். எனவே எச்சரிக்கையாக செயல்படுவது சிறந்தது.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். உங்கள் உணர்ச்சிகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தாதீர்கள்.

பணப்புழக்கம் குறைவாகக் காணப்படும். உங்களின் பிரியமானவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park